(51)

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1885/2 - 2014 ඔක්තෝබර් මස 20 වැනි සඳුදා - 2014.10.20

1885/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ. - பி. 21/1978 (xii)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இக்கட்டளை மூலம், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்ற இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதிய 1602/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய 1482/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையைப் பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(1) “பீடம்” என்ற தலைப்பின் கீழ் மேற்கூறப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “கலைப்பீடம்” என்ற விடயத்திலும் “துறை” என்ற தலைப்பின் கீழ் அத்தகைய அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற அதன் நேரொத்த பதிவுகளிலும் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| “நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறை |
|---|---|
| கலைப்பீடம் | 1. அரபு, இஸ்லாமி நாகரீகத் துறை |
| | 2. தொல்பொருளியல் துறை |
| | 3. செம்மொழித் துறை |
| | 4. பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை |
| | 5. கல்வியியல் துறை |
| | 6. ஆங்கிலத் துறை |
| | 7. நுண்கலைத் துறை |
| | 8. புவியியல் துறை |

| நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறை |
|---|---|
| கலைப்பீடம் (தொடர்ச்சி) | 9. வரலாற்றுத் துறை |
| | 10. அரசறிவியல் துறை |
| | 11. மெய்யியல் மற்றும் உளவியல் துறை |
| | 12. பாளி மற்றும் பௌத்த கற்கை நெறித் துறை |
| | 13. தமிழ்த் துறை |
| | 14. சிங்களத் துறை |
| | 15. சமூகவியல் துறை |
| | 16. சட்டத்துறை". |

(2) "பீடம்" என்ற தலைப்பின் கீழ் மேற்கூறப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "இணைந்த சுகாதார விஞ்ஞானக் கற்கைகள் பீடம்" என்ற பதிவை உடனடுத்தும், "துறை" என்ற தலைப்பின் கீழ் அத்தகைய அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற அதன் நேரொத்த பதிவுகளிலும் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும் :-

| "நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறை |
|---|---|
| முகாமைத்துவப் பீடம் | 1. முகாமைத்துவக் கற்கைகள் துறை |
| | 2. வணிக நிதித்துறை துறை |
| | 3. மனித வள முகாமைத்துவத் துறை |
| | 4. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை |
| | 5. செயற்பாட்டு முகாமைத்துவத் துறை |
| | 6. கணக்கீட்டுத் துறை |
| | 7. வணிகப் பொருளியல் துறை |
| | 8. வணிகத் தகவல் தொழில்நுட்பத் துறை". |

திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2014, செத்தெம்பர் 26.

11-05